இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர்: கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 24-10-2025

# பழனிசாமியின் பொய் மூட்டை!

ஏதாவது ஒரு பொய் மூட்டையை தினந்தோறும் அவிழ்த்து விடுவது பழனிசாமியின் வழக்கம். இப்போது நெல் கொள்முதலை வைத்து பொய் மூட்டையை தூக்கித் திரிகிறார் பழனிசாமி.

நெல் கொள்முதல் விவகாரத்தில் தமிழ்நாடு அரசு தவறான தகவல்களைக் கூறுவதாகவும், மாவட்டத்தில் உள்ள நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகளைக் கொட்டி வைத்து விவசாயிகள் காத்திருப்பதாகவும் பழனிசாமி பம்மாத்து பேட்டிகள் கொடுத்துள்ளார். இவை எல்லாம் அவரது ஆட்சிக் காலத்து கதைகள் ஆகும்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 600 முதல் 700 மூட்டைகள் வரை தான் கொள்முதல் செய்தார்கள். 2020-ஆம் ஆண்டு ஒரு முறை மட்டும் கொள்முதல் அளவினை 800 முட்டைகள் என்பதில் இருந்து 1000 மூட்டைகளாக பழனிசாமி ஆட்சியில் உயர்த்தி வழங்கப்பட்டது. அதனால் விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் இதற்காக கோரிக்கை எழுப்ப வேண்டி இருந்தது.

**இதனை மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றி அமைத்தார்கள். விவசாயிகளிடம் நிரந்தரமாக 1000 மூட்டைகள் பிடிப்பதற்கும் - ஒரு ஏக்கருக்கு 60இல் இருந்து 70 மூட்டைகள் பிடிப்பதற்கும், கூடுதல் மெஷின் வைப்பதற்கும் நிரந்தர ஆணை 13.2.2025 அன்று முதல் அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கொள்முதல் செய்யப்படும் நேரம் மாலை 6 மணியில் இருந்து இரவு 8 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தெரியாமல் பேசி வருகிறார் பழனிசாமி.**

தமிழ்நாடு நெல் விளைச்சலில் மகத்தான சாதனையைப் பெற்று வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 456.44 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடையப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன் ஹெக்டேருக்கு 2,835 கிலோவாக இருந்த உணவு தானியப் பயிர்களின் உற்பத்தித்திறன் இந்த ஆண்டில் 2,857 கிலோவாக அதிகரித்துள்ளது.

பயிர் உற்பத்தித் திறனில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் முதலிடம். மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பில் இரண்டாம் இடம். குறுதானியங்கள் மற்றும் நிலக்கடலையில் மூன்றாம் இடம் என்ற அளவில் சிறந்து விளங்குகிறது.

தமிழ்நாடு அரசு நெல் கொள்முதல் கிடங்குகளை தமிழ்நாடு அரசு அதிகம் திறந்துள்ளது. டெல்லியில் உள்ள தேசிய கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைப் பதிவு செய்ததற்காகத் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு கடந்த ஜனவரி மாதம் முதல் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது. 100 கோடி மதிப்பீட்டில் 230 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.359 கோடியில் மேல் கூரையுடன் நெல் சேமிப்புத் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நெல் விளைச்சல் அதிகம் ஆனால், உணவு உற்பத்தி அதிகம் ஆனால், சேமிப்புக் கிடங்குகள் அதிகமாகத் தேவைப்படும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து தமிழ்நாடு அரசு அதனை உருவாக்கியது.

சன்னரக நெல் குவிண்டாலுக்கு 2450 ரூபாயும், பொதுரக நெல் குவிண்டாலுக்கு 2405 ரூபாயும் அரசால் வழங்கப்பட்டது. சன்னரக நெல்லுக்கு 130 ரூபாயும், பொதுரக நெல்லுக்கு 105 ரூபாயும் ஊக்கத் தொகை ஆகும்.

**விளைச்சல் அதிகமானதும், நெல்லுக்கு உரிய விலை கொடுத்ததும், சேமிப்புக் கிடங்குகள் உருவாக்கியதும் எடப்பாடி பழனிசாமியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் போலி விவசாயியான அவர் பொய் மூட்டை வியாபாரம் பார்க்கிறார்.**

**'நெல் கொள்முதல் செய்யப்படவில்லை' என்ற பொய்யைத் திரும்பத் திரும்ப பழனிசாமி சொல்லி வருகிறார். இதற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, சட்டமன்றத்திலேயே விரிவாக பதில் அளித்திருக்கிறார்.**

**நான்கு ஆண்டுகளுக்கு முன் நெல் கொள்முதல் அக்டோபர் முதல் நாளிலிருந்து வாங்கப்பட்டது. நெல் விவசாயிகளின் நலன் கருதி அக்டோபர் 1ஆம் நாளுக்குப் பதிலாக, ஒரு மாதம் முன்பாக செப்டம்பர் முதல் நாளிலிருந்து நெல் கொள்முதல் செய்ய வழிவகுத்து அரசு ஆணை வெளியிட்டார் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.**

**டெல்டா மாவட்டங்களுக்கு நேரில் சென்று கொள்முதல், சேமிப்பு, நகர்வு மற்றும் அரவையைத் துரிதப்படுத்த அமைச்சர் சக்கரபாணி நடவடிக்கை எடுத்து வருகிறார். "இந்த ஆண்டில் குறுவைச் சாகுபடி 6.13 இலட்சம் ஏக்கராக உயர்ந்தது. கடந்த ஆண்டின் இந்த கால கட்டக் கொள்முதலை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 1805 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் கொள்முதல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது." என்று அவர் சொல்லி இருக்கிறார்.**

கடந்த பத்தாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் 1.80 கோடி மெட்ரிக் டன். ஆனால் 53 மாதக் கழக ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் 1.94 கோடி மெட்ரிக் டன்.

கடந்த பத்தாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு 7 இலட்சத்து 27 ஆயிரத்து 650 மெட்ரிக் டன். ஆனால் 53 மாத தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் மற்றும் கட்டப்படவுள்ள கிடங்குகளின் கொள்ளளவையும் சேர்த்தால் 7 இலட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் ஆகும்.

விவசாயிகளிடம் அதிகம் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதற்காக நாளொன்றுக்கு 5000 நெல் மூட்டைகள் கொள்முதல் செய்திடும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம் - ஒரத்தநாடு வட்டம், பஞ்சநதிக்கோட்டையில் மெகா நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. இவற்றை மறுக்கிறாரா பழனிசாமி?




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், திருச்சி மாவட்டம் – துறையூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் – திருமயம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### அ.தி.மு.க. ஆட்சியில்

# சாலை - பாலங்கள் கட்டியதில் ரூ.20 கோடி முறைகேடு!

## லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு!

சென்னை, அக். 24 -

அ.தி.மு.க. ஆட்சியில் தஞ்சாவூர், சிவகங்கை, கோயம்புத்தூரில் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டியதில் ரூ.20 கோடி முறைகேடு நடந்துள்ளதாக லஞ்சஒழிப்புதுறை புதிய வழக்கு பதிவு செய்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் 2016-21 காலக்கட்டத்தில் சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களில் சாலைகள், பாலங்கள் அமைப்பதற்கான டெண்டர்கள் விடப்பட்டன.

**அவசர அவசரமாக டெண்டர்!**

இந்த டெண்டர்கள் பெரும்பாலும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் உறவினர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இதில் 2 டெண்டர்கள் 2021 சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் விதிமுறைகள் வெளிவருவதற்கு 10 நாட்களுக்கு முன்பு அவசர அவசரமாக வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தஞ்சாவூரில் 208.334 கிலோமீட்டர் தூரம் நெடுஞ்சாலை பராமரிப்பிற்காக ஆர்.ஆர்.இன்பிரா நிறுவனத்திற்கு ரூ.655.5 கோடி டெண்டர் வழங்கப்பட்டது. ஜெ.எஸ்.வி. இன்பிரா நிறுவனத்திற்கு ரூ.493.366 கோடி டெண்டர் வழங்கப்பட்டது. கே.சி.பி. நிறுவனத்திற்கு ரூ.680.460 கோடிக்கு டெண்டர் வழங்கப்பட்டது. சிவகங்கை மண்டலத்தில் சாலை பராமரிப்பு மற்றும் சாலை அமைப்பதற்காக ரூ.715 கோடி எஸ்.பி.கே. என்ற நிறுவனத்திற்கும், கோவை உக்கடம் ஆத்துப்பாலத்திற்கும் உக்கடம் சந்திப்புக்கும் இடையே பாலம் கட்டுவதற்காக ரூ.121 கோடி ஆர்.ஆர். இன்பிரா நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டது.

**போலி ஆவணம் சமர்ப்பிப்பு!**

இந்த நிறுவனங்கள் எஸ்.பி. வேலுமணியின் உறவினர்களுக்குச் சொந்தமானவை. இந்த நிறுவனங்களுக்கு தரப்பட்ட டெண்டரில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. சாலை பராமரிப்பு மற்றும் சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் உள்ள நிறுவனங்களுக்கே டெண்டர் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், விதிமுறைகளுக்கு முரணாக போலி ஆவணங்களை தயாரித்து தகுதி குறைந்த ஜெ.எஸ்.வி. இன்பிரா நிறுவனத்திற்கு டெண்டர் ஒதுக்கப்பட்டது.

இதையடுத்து, சாலை பணிகள் மற்றும் மேல்பால பணிகளை சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளுடன் சேர்ந்து லஞ்ச ஒழிப்பு துறை ஆய்வு மேற்கொண்டது.

இதில் ஜெ.எஸ்.வி. நிறுவனத்திற்கு ஜெகதீசன் என்ற பொறியாளர் போலி அனுபவ சான்றிதழ் கொடுத்தது தெரியவந்தது. இதேபோல், மற்ற இரு நிறுவனங்களின் பணிகளை ஆய்வு செய்ததில் அரசுக்கு சுமார் ரூ.20 கோடிவரை இழப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்தது. அதாவது, ஆர்.ஆர்.இன்பிரா மூலம் ரூ.1 கோடியே 66 லட்சமும், ஜெ.எஸ்.வி. இன்பிரா நிறுவனத்தின் மூலம் ரூ.8.5 கோடியும், கேசிபி நிறுவனம் மூலம் ரூ.2.62 கோடியும், எஸ்.பி.கே. நிறுவனம் மூலம் ரூ.7.73 கோடியும் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, ஓய்வு பெற்ற பொறியாளர் ஜெகதீசன், ஆர்.ஆர்.இன்பிரா, எஸ்.பி.கே., ஜெ.எஸ்.வி., கே.சி.பி. ஆகிய நிறுவனங்கள் மீது லஞ்ச ஒழிப்பு துறை கடந்த 17ம் தேதி புதிய வழக்கு பதிவு செய்துள்ளது. ஏற்கனவே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எஸ்.பி.வேலுமணி உள்ளாட்சித் துறை அமைச்சராக பதவி வகித்து வந்தார். அப்போது சென்னை, கோவை மாநகராட்சிகளில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கியதில் 98 கோடியே 25 லட்சம் ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்ததாக தமிழக லஞ்ச ஒழிப்புத் துறையினர் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் 6 வாரங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தவில்லை எனக் கூறி லஞ்ச ஒழிப்புத் துறைக்கு எதிராக அறப்போர் இயக்கம் சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ், சாதாரண மக்கள் மீதான வழக்கு வந்தே பாரத் ரயில் வேகத்தில் செல்வதாகவும், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகள் நகர்வதே இல்லை என்றும் லஞ்ச ஒழிப்புத் துறையை கண்டித்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தான் தற்போது லஞ்ச ஒழிப்புத் துறை புதிய வழக்கை பதிவு செய்துள்ளது.

### வடகிழக்குப் பருவமழையையொட்டி – சென்னை மாநகராட்சி அலுவலக

# கட்டுப்பாட்டு மையத்தில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## சீரமைப்புப் பணிகளை முடுக்கி விட்டார்!

**சென்னை, அக். 24 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, வடகிழக்குப் பருவமழையை யொட்டி பொதுமக்கள் அளித்த புகார்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டு, சீரமைப்புப் பணிகளை முடுக்கி விட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை கணினிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள எல்.ஈ.டி திரைகள் மூலமாக நகரின் பல்வேறு இடங்களில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுவதையும், மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு கால்வாய்களில் மழை நீர் தடையின்றி செல்வதையும், முகத்து வாரத்தில் நீர் தடையின்றி கடலுக்கு செல்வதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

1913 என்ற உதவி எண்ணிற்கு பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை தானே நேரடியாக கேட்டறிந்தது டன் உதவி எண்ணில் தன்னிடம் தொடர்பு கொண்ட புகார்களின் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் நுங்கம்பாக்கம் ஜெய்சங்கர் சாலை பகுதிக்கு நேரில் சென்று தேங்கிய மழை நீர் அகற்றப் பட்டதை நேரில் பார்வையிட்டு, சீரமைப்பு பணிகளை முடுக்கி விட்டார்.

தொடர்ந்து 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அண்மையில் தான் தொடங்கி வைத்த விருகம்பாக்கம் கால்வாய் சீரமைப்பு பணிகளின் காரணமாக நெற்குன்றம் பகுதியில் நீர் சீராக செல்வதை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, பணியின் முன்னேற்றம் குறித்து மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பெருங்குடி மண்டலம் செம்மொழி சாலை பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிகள் நடைபெற்று வரும் மேடவாக்கம் சந்திப்பு பகுதி, 191வது வார்டு பகத்சிங் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்காமல் உடனுக்குடன் மோட்டார் பம்ப் உதவியுடன் நீரை அகற்றும் பணிகளை மேற்கொள்ளவும், நிவாரண மையங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறும், அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மழையின் தீவிரத்தை தொடர்ந்து கண்காணித்து சீரமைப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல். மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பசும்பொன் உ.முத்துராமலிங்க தேவர் அவர்களின் குருபூஜை விழா வருகின்ற 30தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அரசு விழாவாக அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு நடைபெற்று வரும் முன்னேற்பாடுகள் குறித்தும் ஆய்வு பணிகள் குறித்தும் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சி தலைவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.